சுருக்கம்

உயர்கல்வி – தொழில் நுட்பக் கல்வி – 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாட்டில் பயின்ற இலங்கை அகதிகளினுடைய குழந்தைகளை சேர்க்க அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண். 172

நாள் 29.6.2010
ஆனி 15
திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (1டி) எண்.207, உயர்கல்வித்துறை, நாள் 31.8.2009.
2. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.47961/இசிஏ1/2009, நாள் 10.3.2010.
3. அரசு கடித எண்.4390/ஜே2/2010–1, நாள் 22.4.2010.

-----

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2009–2010ஆம் கல்வியாண்டில் இலங்கை அகதிகள் முகாம்களிலிருந்து பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற விரும்பும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட தலைமையிடத்து வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஆளறிச் சான்றுடனும், அகதிகள் முகாம்களில் பதிவு செய்யப் பெறாதவர்கள் அவர்களுடைய விசா மற்றும் கடவுச் சீட்டுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பொறியியல் கல்லூரிகளில் மற்ற மாணவர் சேர்க்கை முடிவுற்றபின் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மிகாமலும், பொதுப்பிரிவின் கீழ் காலியிடங்கள் ஏதும் இருப்பின் அதில் இலங்கை அகதி மாணவர்களை சேர்க்க பரிசீலிக்குமாறு தொழில் நுட்பக் கல்வி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார். மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் 2010–2011ஆம் கல்வியாண்டிலும் அதே நடைமுறையை பின்பற்றுமாறு தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

2. ஆனால் தமிழக பள்ளிக் கூடங்களில் படித்து தேர்வு பெற்று மிக அதிகமான மதிப்பெண்கள் பெற்ற இலங்கை அகதிகளினுடைய குழந்தைகள் கூட விரும்புகின்ற பொறியியல் கல்லூரிகளில் சேர முடியாத நிலைமை இருக்கிறது. தமிழக பள்ளிக்கூடங்களில் படித்து தேர்வு பெற்று, தகுதி பெற்ற இலங்கை அகதி மாணவர்களை மற்ற மாணவர்களோடு, அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் பொதுக்

கலந்தாய்வு தரவரிசையில் சேர்க்கப்பட்டு அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்வது சரியான நடைமுறையாக இருக்கும் என்பதால் தமிழக பள்ளிக்கூடங்களில் படித்த இலங்கை அகதிகளினுடைய குழந்தைகளை பொதுப்பட்டியலில், தரவரிசையின் அடிப்படையில், பொறியியல் கல்லூரிகளில், சேர்த்துக் கொள்ளலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
இயக்குநர், மறுவாழ்வுத்துறை, சென்னை–5 (தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
செயலாளர், பொறியியல் மாணவர் சேர்க்கை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25/
திருச்சிராப்பள்ளி/ கோயம்புத்தூர்/திருநெல்வேலி.
அனைத்து பொறியியல் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
நகல்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
பொதுத் (மறுவாழ்வு) துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்